**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 1 –ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு .சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **வேலுச்சாமி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**05.08.2025** **OS.No. 8/2020** **பி.வா.சா. 1 ஆஜர்**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

மாரியம்மாள் செந்தில்குமார் வகையறா என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்ன பரிகாரம் கேட்டு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் வீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் .தாவா வீட்டிற்கு வடக்கே ராமுத்தேவர் காலி இடம் என்றால் காலி இடம் இல்லை , ராமுத்தேவரின் ஓட்டு வீடு ஆகும். தெற்கே கிழமேல் வீதி என்றால் சரிதான் . மேற்கே சுப்பையா தேவர் காலி இடம் என்றால் சரியல்ல . கருப்பசாமிக்கு பாத்தியமான பட்டா இடமாகும். இந்த வழக்கு சம்பந்தமாக ஏற்கனவே மானாமதுரை டி .மு கோர்ட்டில் OS No.7/2004 வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான் . அந்த வழக்கில் நான் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான் . தாவா சொத்து உட்பட மொத்தம் 9 இலக்க சொத்துக்களுக்கு மேற்படி OS No.7/2004 வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 8 ம் இலக்க சொத்தாக கண்ட தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமாக விளம்புகை செய்யப்பட்டது என்றால் சரிதான் . மேற்படி OS No.7/2004 வழக்கில் கண்ட 8 ம் இலக்க சொத்தின் நான்குமாலும் தாவா சொத்தின் நான்குமாலும் ஒன்றாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி OS No.7/2004 ல் கண்ட 8 ம் இலக்க சொத்தில் கண்ட நான்குமாலை தான் தாவா வழக்கில் கண்ட நான்குமாலாக உள்ளது என்றால் சரியல்ல . OS No.7/2004 ல் கண்ட வாதிகளும் பிரதிவாதிகளும் சேர்ந்து சமரச கிராம முக்கியஸ்தார்கள் முன்னிலையில் சமரச ஏற்பாடு செய்து கொண்டோம் என்பதற்கு எழுத்துமூல ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது . மதுரையில் உள்ள பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கடைக்கு எழுத்துமூலம் ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியமுடையது என்பதற்கு

எந்த ஆவணமும் இல்லை என்றால் வீட்டு வரி ரசீது தான் உள்ளது. வீட்டு வரி, மின் கட்டண ரசீதுகள் அனைத்தும் OS No.7/2004 வழக்கிற்கு பின்னீடு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்துக்களில் எந்த வித பாத்தியம் இல்லை என்றாலும், வாதிகளுக்கு தாவா சொத்து கிடைக்க கூடாது என்பதற்காக வீண் விவாதம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam